**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி : 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

**பெறுநர்,**
ஆசிரியர்,

தேதி : 07.01.2026

**ஐயா,**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் புதிய பதிவாளராக முனைவர் சுப்பிரமணியன் காசிராஜன் நியமனம்

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் (TNAU) புதிய பதிவாளராகவும், பொறுப்பு துணைவேந்தராகவும் மூத்த வேளாண் விஞ்ஞானியும், கல்வியாளருமான முனைவர் சுப்பிரமணியன் காசிராஜன் (Dr. Subrahmaniyan Kasirajan) அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

**கல்வி மற்றும் சர்வதேச ஆராய்ச்சிப் பின்னணி:**

1969–ஆம் ஆண்டு கடலூர் மாவட்டம் விருத்தாசலத்தை அடுத்த பேராலையூர் கிராமத்தில் பிறந்த இவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் பாடப்பிரிவில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டங்களையும், 2003–ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்தையும் பெற்றார். தனது முதுநிலைப் படிப்பின் போதே இந்திய வேளாண் ஆராய்ச்சித் திட்டத்தின் (ICAR) இளநிலை ஆராய்ச்சியாளருக்கான உதவித்தொகையைப் பெற்றுள்ளார்.

இந்திய சீனா ஒப்பந்த திட்டத்தின் உதவியுடன் சீனாவின் ஜெஜியாங் பல்கலைக்கழகத்தில் (Zhejiang University) மட்கும் பிளாஸ்டிக் மூடாக்கு குறித்து மேம்பட்ட ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.

பின்னர், அமெரிக்காவின் மிச்சிகன் மாநில பல்கலைக்கழகத்தில் புகழ்பெற்ற 'ஃபுல்பிரைட்' (Fulbright Fellow) ஆய்வாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நுண் தட்பவெப்பநிலை மாற்றங்கள் குறித்து உயர் ஆராய்ச்சிகளை செய்துள்ளார். இவ்வாறு சர்வதேச அளவில் சிறந்த ஆராய்ச்சி அனுபவம் கொண்டவர்.

**முக்கியப் பதவிகளும் பங்களிப்புகளும்:**

சுமார் 30 ஆண்டுகால அனுபவம் கொண்ட இவர், பல்கலைக்கழகத்தின் பல்வேறு முக்கியப் பொறுப்புகளை வகித்துள்ளார்:

- ஆடுதுறை, தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தின் (TRRI) இயக்குநர் (2022 முதல் தற்போது வரை).
- விருத்தாசலம், மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் (2020–2022).
- பாலார் வேளாண்மைக் கல்லூரியின் முதல்வர் (2018–2019).
- விருத்தாசலம், வேளாண் அறிவியல் நிலையத்தின் (KVK) திட்ட ஒருங்கிணைப்பாளர் (2010).

**சாதனைகள் மற்றும் விருதுகள்:**

- **பயிர் இரகங்கள்:** நெல், நிலக்கடலை, எள் மற்றும் சிறுதானியங்கள் உள்ளிட்ட 25–க்கும் மேற்பட்ட புதிய பயிர் இரகங்களை வெளியிடுவதில் முக்கியப் பங்காற்றியுள்ளார்.

  குறிப்பாக, 6 புதிய நிலக்கடலை இரகங்கள், 7 புதிய நெல் இரகங்கள், மூன்று எள் இரகங்கள், 2 பச்சை பயறு இரகங்கள், 2 பருத்தி இரகங்கள் மற்றும் புதிய சிறுதானிய பயிர் இரகங்கள் ஆகியவற்றை வெயிளியிடவும் முக்கிய பங்காற்றியுள்ளார்.

- காவேரி டெல்டா பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த பண்ணை முறைகளை உருவாக்கி, அதை உழவர்களை கடைபிடிக்க செய்துள்ளார்.
- **ஆய்வுக் கட்டுரைகள்:** 150–க்கும் மேற்பட்ட சர்வதேச ஆய்வுக் கட்டுரைகளையும் 5 புத்தகங்களையும் எழுதியுள்ளார்.

- **விருதுகள்:** இவரது தலைமையின் கீழ் விருத்தாசலம் வேளாண் அறிவியல் நிலையம் 2010–ஆம் ஆண்டு நாட்டின் "சிறந்த கே.வி.கே" (Best KVK) விருதினைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து 2011–ஆம் ஆண்டு, நிலக்கடலை ஆராய்ச்சியில் சாதனை செய்ததற்காக திரு. நல்ல வெங்கடப்பா விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். மேலும் இந்திய உழவியல் சங்கத்தால் வழங்கப்படும் சிறந்த விஞ்ஞானி விருது மற்றும் தங்கப்பதக்கத்துடன் கூடிய ஐ.எஸ்.ஏ (ISA) ஃபெலோ விருது உள்ளிட்ட பல கௌரவங்களைப் பெற்றுள்ளார்.

மேலும் இவர் பல முனைவர் பட்ட மாணவர்களை வழி நடத்தியுள்ளதோடு பல சர்வதேச பத்திரிக்கைகள் மற்றும் வெளியீடுகளின் மதிப்பீட்டாளராகவும் செயல்பட்டு வருகிறார். சுமார் 30 ஆண்டு காலமாகப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளில் அனுபவமிக்க இவரது தலைமையில் பல்கலைக்கழகம், மேலும் பல்வேறு முன்னேற்றங்களை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**